RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2231

# திருஞானசம்பந்தர் வரலாறும் மறுகட்டமைப்பும்

கு. கார்த்திக் [அ, *], வெ. திருவெணி [அ],

[அ] தமிழ்ப் பண்பாட்டு மையம்,அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

# History and Reconstruction of Thirugnanasambandar

K. Karthick [a, *], V. Thiruveni [a]

[a] Center for Tamil Culture, Alagappa University, Karaikkudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: tamilkarthik1998@gmail.com

Received: 11-11-2021
Revised: 21-04-2022
Accepted: 12-05-2022
Published: 09-06-2022

Check for updates

**ABSTRACT**

Religious literature in Tamil is full of fiction with many unnatural events. Such stories were created for the development of religion. Beyond the tendency to approach them superficially as mere fiction, it is essential for the intelligent community to explore them on the basis that every fictional story has a background cause.Thus, the scriptures tell the story of Thirugnanasambandar, who is considered to be a Saiva (Devotee of Lord Siva) doing impossible deeds, differently from each other. This article reviews the obvious readings and reconstructions of the history of Thirugnanasambandar by Vannacharabam Dhandapani Swami in his Puluvar Puranam. They convey the oral stories and ideas about Thirugnanasambandar, that existed in the 19th century, as well as the logical study of history and the fictional background of antecedents.

**Keywords:** Thirugnanasambandar, Periyapuranam, Perumpatra Puliyur Nambi, Dhandapani Swami, Samanar Kaluvetram, Vaidigam, Velvi, Tharukam

## முன்னுரை

தேவார மூவரில் முதன்மையானவராகக் கருதப்படுபவர் திருஞானசம்பந்தர். வைதிக நெறியில் சைவ சமயத்தைத் தமிழ்ப் புலமையால் வளர்த்து நிலைநிறுத்தியவர். பிற சமயத்தவர்களை வென்று அழிப்பதற்காகவே அவதரித்தவர் என்று சைவர்களால் போற்றப்படுபவர். இவர் பாடிய தேவாரப் பதிகங்கள், சுந்தரரின் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பியின் நூல்கள், சேக்கிழாரின் பெரியபுராணம் முதலிய நூல்களில் இவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் வரலாற்றினை நூற்றாண்டுகள் கடந்தும் சைவ சமய நூல்கள் பலவும் பதிவு செய்துள்ளன. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (Kalaivani, 2020). இவர் சைவ மரபில் பிறந்திருந்தாலும் அறுசமயச் சமரசக் கொள்கையுடைய புலவராகத் திகழ்ந்தார். இவர் இயற்றிய புலவர் புராணம் எனும் நூலில் திருஞானசம்பந்தர் சருக்கத்தில் சம்பந்தரைப் பற்றி இவர் கற்றும் கேட்டும் அறிந்த செய்திகளைப் பதிவு செய்துள்ளார். அத்தோடு சம்பந்தர் வரலாறு பற்றிய தனது கருத்துக்களையும் எடுத்துக்கூறி, அக்கருத்திற்கேற்ப சில மாற்றங்களையும் செய்துள்ளார். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய நூல்களில் கூறப்பெற்ற சம்பந்தர் வரலாற்றையும், அவற்றை மறுவாசிப்பிற்கு உட்படுத்தியுள்ள தண்டபாணி சுவாமிகளின் புலவர் புராணம் கூறும் சம்பந்தர் வரலாற்றையும் ஒப்பிட்டு ஆராய்ந்து இவற்றுள் காணப்படும் மாற்றங்களையும், மறுகட்டமைப்பினையும் அறிவதோடு அவற்றுக்கான காரணங்களை ஆராய்வது இக்கட்டுரையின் பொருளாகும்.

## புலவர் புராணம்

தண்டபாணி சுவாமிகள் இலட்சம் பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார். அதில் பாதிக்கும் குறைவாகவே கிடைத்துள்ளன. பல்வேறு இலக்கிய வகைகளைப் பாடும் ஆற்றல் மிக்க தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டது "புலவர் புராணம்" எனும் நூல். 3005 பாடல்களைக் கொண்ட இந்நூலில், 72 சுருக்கங்கள் உள்ளன. முதல் 68 சருக்கங்களில் தனிப் புலவர்களின் கதைகளும், இறுதி 4 சருக்கங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட புலவர்களைப் பற்றிய கதைகளும் கூறப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு சமயங்களைச் சார்ந்த புலவர்களைப் பற்றியும், அவர்கள் செய்ததாகக் கூறப்படும் திருவருட் செயல்களையும் விளக்குவதாக இப் "புலவர் புராணம்" அமைகிறது. அதிசயங்கள் புரியாத புலமை மிக்கப் புலவர்களை அறிவுத்தன்மைப் புலவர் சருக்கத்தில் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் தண்டபாணி சுவாமிகள். அவரது சமகாலப் புலவர்களின் வரலாற்றினைக் கண்கண்ட புலவர் சருக்கத்தில் பாடியுள்ளார். இந்நூலில் இடம்பெற்றுள்ள புலவர்களின் வரலாறுகள் பெரும்பாலும் வாய்மொழிக் கதைகளாக தண்டபாணி சுவாமிகளின் காலத்தில் வழங்கி வந்தவையாக உள்ளன. இதனை நூலின் சிறப்புப் பாயிரப் பகுதியில் "ஆதாரம் உலகோர் நவில்மொழியும்" என்ற பாடலடியால் தெரிவித்துள்ளார். இதனால் புலவர் புராணத்தில் கூறப்பட்டுள்ள சில புலவர்களின் வரலாறுகள் முந்துநூல்களில் கூறப்பட்டுள்ள வரலாறுகளோடு மாறுபடுகின்றன (Dandapani Swamigal, 1994).

## திருஞானசம்பந்தர் பிறப்பு

திருஞானசம்பந்தர் பிற சமயங்களை அழித்து, வைதிக நெறியில் சைவத் துறையை வளர்ப்பதற்காகவே அவதரித்ததாகப் பெரிய புராணம் முதலிய நூல்கள் குறிப்பிடுவது போலவே தண்டபாணி சுவாமிகளும் தம் புலவர் புராணத்தில் குறிப்பிடுகிறார். சமண சமயத்தின் வளர்ச்சியால் வைதிக சமயமான சைவம் வீழ்ச்சி அடைந்திருந்த காலத்தில், சீர்காழி சிவனிடம் சமண சமயத்தை வேரறுக்கும் வலிமையுடைய ஒரு குழந்தையைத் தனக்குக் கொடுத்தருளுமாறு வேண்டித் தவம் செய்தார் சிவபாத இருதயர் என்ற அந்தணர். இத் தவத்தின் பயனாய்ச் சிவனருளால் அவர்க்கு மகனாகத் திருஞானசம்பந்தர் பிறந்தார் என்பது தான் பெரிய புராணத்தில் சேக்கிழார் கூறும் வரலாறு. அவர் சம்பந்தரை முருகன் அவதாரமாகக் குறிப்பிடவில்லை. ஆனால், "திருஞானசம்பந்தப் பெருமான் சைவ சமயாச்சாரியர்களில் முதல்வராக மதிக்கப் பெற்றவர். முருகப் பெருமானுடைய திருவவதாரம் என்று ஒட்டக்கூத்தர், அருணகிரிநாதர் முதலிய புலவர் பெருமக்கள் துதித்துப் பாடியிருக்கிறார்கள்" (Jagannathan Ki.Va, 1962). இம் முந்துநூற் கருத்திற்கு மாறுபட்டதொரு அவதாரக் கதையினை தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணத்தில் திருஞானசம்பந்தர் சருக்கத்தில் சேர்த்துள்ளார். அக்கதையாவது, கையிலாயத்தில் உரோமச முனிவர் என்பவர் சமணர்களின் இறுமாப்பை ஒழிக்கவேண்டும் என்று சிவனிடம் வேண்டி நின்றார். சிவன் உரோமச முனிவரை நோக்கி, “சமணர்களை வெல்ல நீயே ஒரு மகனாக பூமிக்குச் செல்க" என்று ஆணையிட்டார். இதைக் கேட்டு நடுக்கமுற்றுச் சோர்ந்த உரோமச முனிவர், பிறகு நாரதர் சொற்படிக் கேட்டு முருகனைப் பணிந்து வணங்கினார். முருகன் உரோமசரிடம், “நீ சீர்காழியில் தவம் செய்யும் அந்தணனின் மகனாகப் பிறப்பாய், அதன் பிறகு என் தந்தை சிவனின் அருளால் என் தாய் உமையின் பால் அருந்தி மெய் ஞானமும், சித்தியும், மூர்க்கர்களின் குதர்க்கமான வாதத்தை வெல்லக் கூடிய ஊகமும் புலமையும் பெற்று என் பதத்தன் ஆகி முத்தி அடைவாய்” என்று கூறினான் என்கிறார் தண்டபாணி சுவாமிகள். இவ்வாறு சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகனாய்த் திருஞானசம்பந்தராக அவதரித்தவர் உரோமச முனிவர், என்று கூறும் இக்கதையை அதுவரை எந்த நூலாசிரியரும் கூறாத நிலையில், புதிய செய்தியாகக் கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள்.

“எல்லாமும் தானேசெய் தியாதோன்றும் செய்யானாம்

வல்லான்அம் முனிவரனை மலர்க்கண்அருள் உறப்பார்த்தப்

பொல்லாங்கு தீர்தரவோர் புத்திரனா நீதானே

செல்லாங்கென் றுரைத்திடலும் திடுக்கமுற்று நனிசோர்ந்தான்”.

என்ற பாடல்வழி இச்செய்தியை அறியமுடிகிறது (Dandapani Swamigal, 1994). தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணத்தில் வாய்மொழிக் கதைகளுக்கு கொடுத்துள்ள முதன்மைத்துவத்தை உணர்த்துவதாக இக்கதை அமைகிறது. சீர்காழித் தலத்தில் உள்ள கட்டுமலைக் கோவில் உரோமச முனிவரின் வேண்டுகோளால் சிவன் அருளியது என்று ஒரு கதை நிலவுகிறது. இது சீர்காழிக் கோவிலுக்கும் உரோமச முனிவர்க்கும் உள்ள தொடர்பினை உணர்த்துகிறது. ஞானசம்பந்தரும் சீர்காழியில் பிறந்தவர் ஆதலால், இவ் அவதாரக் கதையை அப்பதியில் வாழ்வோர் யாரேனும் உருவாக்கியிருக்கலாம் என்று எண்ணற்பாலது.

## முத்தி அடையும் நிகழ்வில் புதுப்புனைவு

இறுதியாக சம்பந்தர் தன் திருமணத்திற்கு வந்திருந்த சுற்றத்தினரோடு, சிவன் காட்டிய முத்தித் தீயில் இறங்கவிருந்தபோது, மாதவிடாய் உற்ற பெண் ஒருத்தி, தானும் முத்தியடைய விரும்பினாள் என்றும், அவள் திருஞானசம்பந்தரைப் பணிந்து வணங்கி தன் நிலையை எடுத்துரைத்த போது, அதைக்கேட்ட சம்பந்தர், பெருநெருப்புக்கு ஈரம் இல்லை, ஆகவே நீயும் முக்தியடையலாம் என்று கூறியதாகவும்,

"ஆங்குறும் பலரும் உட்போய் அதிற்கலந் ததுவே ஆனார்

வீங்குபூண் முலையாள் மாத விடாயினள் ஒருத்தி, வேட்கை

தாங்குறா திரங்கி, அன்னோன் சரண்பணிந் ததனைச் சொன்னாள்

ஏங்குறேல் பெருநெ ருப்பிற் கீரமின் றேகென் றானே"

என்ற புலவர் புராணப் பாடலில் ஒரு கதையினை தண்டபாணி சுவாமிகள் கூறுயுள்ளார் (Dandapani Swamigal, 1994). இக்கதை வாய்மொழியாக அவர் அறிந்த கதையாகுமேயானால், சமூகத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் ஆன்மீக விடுதலை வேண்டும் என்கிற கருத்தாக்கத்தினால் உருவான கதையாக இருக்கலாம். "ஏனெனில், வைதிக சமயங்களின் சமயநிறுவனங்களான கோயில், மடாலயம் போன்றவைகளில் தீட்டு என்பதைக் காரணம் காட்டி, பெண் நுழைவு தடைசெய்யப்படுகிறது. இம்மரபைத் தண்டபாணி சுவாமிகள் 1890ஆம் ஆண்டு அளவிலே எதிர்த்து அம்மரபை உடைத்துப் புரட்சி செய்துள்ளார்" (Venkataraman, 2004). "தமிழ் இலக்கியப் பரப்பில், பெண் தீட்டுடையவள் என்பதை எதிர்த்த முதல் ஆணின் கலகக்குரல், தண்டபாணி சுவாமிகளுடையது" என்று சு. வேங்கடராமன் குறிப்பிடுகிறார் (Venkataraman, 2004). இக்கதை வாய்மொழியாகக் கேட்டுப் பனுவலாக்கப் பட்டிருந்தாலும், அக்காலத்தில் வைதிக சமயத்தவர் ஒருவர் தம் நூலில் இதனைப் பாடியிருப்பதே பெரும் வியப்பிற்குரியதாகும். அவ்வகையில் புலவர் புராணம் வாய்மொழிக்கதைப் பனுவலாக்கத்திற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

## கழுவேற்ற நிகழ்வில் மாற்றங்களும் மறுவாசிப்பும்

திருஞானசம்பந்தரோடு அனல்வாதம் புனல்வாதம் ஆகியவற்றில் தோல்வியுற்ற சமணர்கள் கழுவேற்றிக் கொன்றொழிக்கப்பட்டனர். "சம்பந்தர் காலத்திற்குப் பின் நம்பியாண்டார் நம்பி இதை முதன் முதலாகக் குறிப்பிடுகிறார்" (Venkataraman, 2007). இதனை,

"குழுவா யெதிர்ந்த உறிகைப் பறிதலைக் குண்டர்தங்கள்

கழுவா வுடலம் கழுவின வாக்கிய கற்பகமே"

என்ற நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி அடிகளால் அறியமுடிகிறது (Vasantha Kumar, 2017). இவ்வடிகளில் சமணர்க்கு நிறைவேற்றப்பட்ட கொடிய கழுவேற்ற தண்டனையை ஞானசம்பந்தரின் பெருமைக்குரிய செயலாகப் பாடியுள்ளார் அவர். வரலாற்றில் மிகவும் ஆராயத்தக்க நிகழ்வு சமணர் கழுவேற்றம் ஆகும். சம்பந்தரது பிறப்பே சமணரை வென்று

அழிப்பதற்காக அவர் தந்தை தவமிருந்து பெற்றப் பேறாக சேக்கிழார் தன் பெரியபுராணத்தில் கூறுகிறார்.

## பெரிய புராணத்தில் கழுவேற்றம்

"மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே

ஆதியரு மறைவழக்க மருகியர னடியார்பாற்,

பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்

டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தர்"

"மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்

அனையநிலை தலைநின்றே யாடியசே வடிக்கமல

நினைவுறமுன் பரசமய நிராகரித்து, நீறாக்கும்

புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார்"

என்ற இரு பாடல்களாலும், அக்காலத்தில் சமண சமயம் செல்வாக்குப் பெற்று சைவம் வளரவில்லை என்பதால், பிற சமயங்களை நீக்கி சைவத்தை நிலைநாட்டும் ஒரு மகனை தனக்கு அருளுமாறு சிவனை எண்ணித் தவம் செய்தார் சிவபாத இருதயர் என்பது தெளிவாகிறது (Gnaanasampandhan, 2020). சேக்கிழார் கூறும் திருஞானசம்பந்தர் புராணத்தில் அவரது பிறவி நோக்கம் நிறைவடையும் பகுதியாகத்தான் சமணர் கழுவேற்ற நிகழ்வைக் கருதமுடிகிறது. பிறகு புத்த சமயத்தினரை சம்பந்தர் வென்ற நிகழ்வையும் அவர் கூறுகிறார். ஞானசம்பந்தர்க்குப் "பரசமயக் கோளரி" அதாவது பிற சமயத்தினர்க்குச் சிங்கம் போன்றவன் என்ற சிறப்புப் பெயரையும் சேக்கிழார் வழங்கியுள்ளார். இவ்வாறு சம்பந்தர் பிறசமயத்தினர்க்கு அச்சுறுத்தலாக இருந்தார் என்று படைத்துள்ள சேக்கிழார்,

"புகலியில் வந்த ஞான புங்கவ ரதனைக் கேட்டும்

இகலில ரெனினுஞ் சைவ ரிருந்துவாழ் மடத்திற் றீங்கு

தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலு மென்றே

மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை"

என்ற பாடலில், "சமணர்களைக் கழுவேற்றிக் கொன்று தண்டனை நிறைவேற்றியவன் பாண்டிய மன்னன் தான்" என்கிறார் (Gnaanasampandhan, 2020). சம்பந்தர்க்கு சமணர்கள் மீது வெறுப்பு இல்லை என்றாலும், சைவ சமயத்தார் தங்கிய மடத்தில் தீ வைத்த அவர்களுக்கு இத்தண்டனை பொருந்தும் என்பதால் ஞானசம்பந்தர் தலையிட்டுத் அதைத் தடுக்கவில்லை என்று கூறி அவரை சமய வெறுப்பற்ற புனிதராகவும் கட்டமைக்க முயன்றுள்ளார்.

## திருவிளையாடற் புராணத்தில் கழுவேற்றம்

13ஆம் நூற்றாண்டில் திருவிளையாடற்புராணம் இயற்றிய பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவர், சமணர் கழுவேற்றத்தைச் சற்றே மாறுபடக் கூறியுள்ளார். வெப்புத்தீர்த்த திருவிளையாடலில் வரும் பாடலொன்றில்,

"சாதிமுறை யறியாத சமணர்வழி யொழிவித்தே

யாதரவி னாமந்த நாட்டணுகி யஞ்செழுத்தும்

வேதநெறி யுஞ்சால விளங்குவிக்க வேண்டுமென

வோதரிய திருவுள்ளத் துணருங்கா லிறையருளால்,"

என, சமணநெறியை, சாதிமுறை அறியாத சமணர்வழி என்றும், ஞானசம்பந்தர் அதனை அழித்து வேதநெறியை நிலைநாட்டிட மதுரைக்கு வந்தார் என்கிறார் பெரும்பற்றப் புலியூர் நம்பி (Perumpatrapuliyur Nambi, 1906). சமணர் நெறி சாதிமறுப்பு எனில், அதற்கு எதிராக இருக்கும் வேதநெறி சாதியைப் போற்றும் நெறி என்று எளிதில் விளங்கும். சமணர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்கான காரணங்களில் "சாதிமறுப்பு" முதன்மையானது என்பதாகப் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறியுள்ளார்.

சம்பந்தர் தன்னிடம் வாதத்தில் தோற்ற சமணர்களைத் திருநீறு பூசிக் சிவமதம் சேருமாறு நிபந்தனை விதித்ததாகவும், அதற்கு உடன்படாததால் சமணர்கள் கழுவேற்றி கொல்லப்பட்டனர் என்கிறார் பெரும்பற்றப் புலியூர் நம்பி. இது பெரிய புராணத்தில் கூறப்பட்ட நிகழ்வுக்கு மாறுபட்டு விளங்குகிறது. பாண்டியனின் வெப்பு நோயைச் சம்பந்தர் தீர்த்த பின்பு, அமைச்சர் குலச்சிறையும், அரசி மங்கையர்க்கரசியும் தம் நாட்டில் செல்வாக்குடன் இருக்கும் சமண சமயத்தை அழித்து, சைவத்தை நிலைநாட்டுமாறு சம்பந்தரிடம் கோரிக்கை வைத்தனர். அதனை சம்பந்தரும் ஏற்றுக்கொண்டார். இதனை,

"கலக வெஞ்சமண் கையரைக் களைந்திடா தொழியி

னிலகு சைவசித் தாந்தமுன் னிறந்திடு மிறந்தா

லலகில் வேதமும் வேள்வியு மழிந்திடு மழிந்தா

லுலக வேந்தனு மாரியு முலகமுங் கெடுமால்"

"ஐயமில்லென வறைந்திட வாங்கவர் விரைந்து

வைய மன்னனே வருந்தந் தீங்கினுக் குரியான்

துய்ய காரிய மவன்வயிற் சொல்வமென் றடைந்து

பைய வோதுமுன் வழுதியும் பழுதிலை யென்றான்"

என்ற பாடல்களில், "சமணரைக் களைந்திடாது விட்டால் சைவ சித்தாந்தம் அழிந்திடும். அது அழிந்தால் வேதமும் வேள்வியும் அழிந்திடும், அவை அழிந்தால் அரசனும் மழையும் உலகமும் கெட்டுவிடும் என்பதால் சமணரை ஒழிப்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்று திருஞானசம்பந்தர் ஒப்புக் கொண்டதாகவும், அவரது முடிவினை பாண்டிய மன்னனும் வரவேற்று சமணரைத் தண்டிக்க இசைந்தான் என்றும் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறுகிறார் (Perumpatrapuliyur Nambi, 1906). அனல் வாதத்தில் தோல்வியுற்ற சமணர்கள் புனல் வாதம் செய்ய முன்வந்தனர். அதிலும் தோல்வியுற்றால் சம்பந்தர்க்கு அடிமைகளாகிறோம் என்றும் அவர்கள் கூறினர். ஆனால் திருஞானசம்பந்தர், தனக்கு அடிமையாக்கும் ஆசை இல்லை. நான் வென்றால் உங்கள் எல்லோரையும் கழுவில் ஏற்றவே ஆசைப்படுகிறேன் என்றார், அதற்குச் சமணர்களும் இசைந்தனர் என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி கூறுகிறார்.

"அடிமையிலாசை இல்லை யின்றுநீ ரவையின் சொன்ன

படிபுகழ் வாதுஞ் சொக்கன் பரிவினால் வென்றே மாயிற்

கடிமையி னும்மை முற்றுங் கழுநுதி யேற்றுதற்கு

முடியவேயாசை யென்றாரியைந்தனர் வினையான் மூடர்"

என்ற செய்யுளடிகளால் இக்கருத்து தெளியப் பெறுகிறது (Perumpatrapuliyur Nambi, 1906).

சமணர்கள் கொடுமையாகக் கழுவேற்றப்பட்டதை பெரியபுராணத்தில் ஒரு செய்தியாக மட்டுமே கூறியுள்ளார் சேக்கிழார். ஆனால் பெரும்பற்றப் புலியூர் நம்பி, கழுவேற்றக் கொடுமையை மிகவும் வருணித்துப் பாடியுள்ளார்.

"புகல்வ தேதெதி ரிருந்திடுங் குதவழிப் புகுந்து

பகைகொண் முட்டுடைப் பட்டினி வயிற்றிடைக் குளித்துத்
தகவில் வஞ்சக நெஞ்சகந் தனினிண மருந்தி
யிகழும் வாய்முகங் காட்டிட வேறினர் கழுக்கள்"
"பவமுறு கையர் வெய்ய பாறுசெங் குடர்பிடுங்கச்
சிவையவை சூழக் காக நிழலிடத் திரண்டோர் தாளிற்
றவமுய லலகை யென்னச் சாலவே வாயங் காத்து
கவடிவெண் பற்கள் காட்டி யிருந்தனர் கழுக்கடோறும்"

என்ற இச்செய்யுள்களில் சமணர் தங்கள், குதத்தின் வழியே நுழைந்து, பட்டினி வயிற்றில் குளித்து, வஞ்சகமுடைய அவர்களது நெஞ்சின் நிணத்தை அருந்தி இகழ்ச்சி கூறும் வாய் வழியே முகத்தைப் பிளக்கும் கழுவில் ஏறினர் என்றும், அப்போது அவர்களது குடலினைப் பிடுங்குவதற்காக நரிகளும் காக்கைகளும் சூழ்ந்தன. ஒற்றைக் காலில் தவம் செய்யும் பிசாசுகளைப் போல வாய் பிளக்கப்பட்டு, பற்கள் வெளித்தெரியும்படி கழுக்கள் தோறும் சமணரின் உடல்கள் தொங்கின என்றும் அந்தக் கொடிய நிகழ்வை வருணித்துள்ளார் பெரும்பற்றப் புலியூர் நம்பி (Perumpatrapuliyur Nambi, 1906). மேலும் இந்நிகழ்வு நடைபெற்ற இடம் திருப்பூவணத்தில் "கழுவர் படைவீடு" என இன்றும் அழைக்கப்படுவதாகக் கூறுகிறார். இவ்வாறு பெரிய புராணத்தின் திருஞானசம்பந்தர் புராணத்தினின்றும், திருவிளையாடற் புராணத்தின் கழுவேற்றின திருவிளையாடல் மாறுபட்டுக் காணப்படுகிறது.

## தண்டபாணி சுவாமிகளின் நிலைப்பாடு

தண்டபாணி சுவாமிகள் தன் புலவர் புராணத்தில் சமணர் கழுவேற்றத்தை வேறு முறையில் அணுகியுள்ளார். சமணர்களைக் கழுவேற்றிய கொடிய செயலை தண்டபாணி சுவாமிகள் விரும்பவில்லை. "சைவ மடத்தில் தீயிட்டதால் சமணர்க்கு பாண்டியன் விதித்த தண்டனை ஏற்புடையது தான் என்பதால் ஞானசம்பந்தர் அதில் தலையிடவில்லை" என்ற சேக்கிழாரின் பெரியபுராணக் கருத்தை அவர் ஏற்கவில்லை. "வாதில் தோல்வியுற்ற சமணர்கள் திருநீறு பூச மறுத்ததால் சம்பந்தரின் தொண்டர்களே அவர்களைக் கழுவேற்றினார்" என்ற பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணக் கருத்தையும் தண்டபாணி சுவாமிகள் ஏற்கவில்லை. அவரது சீவகாருண்ய (உயிர் இரக்கம்) நெறியின் அடிப்படையில் முந்தைய நூல்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி சில மாற்றுச்சிந்தனைகளை முன்வைக்கிறார். அதன் அடிப்படையில் கழுவேற்றம் தொடர்பான பகுதியில் சிலவற்றைப் புனைவாகச் சேர்த்துள்ளார்.

## புலவர் புராணத்தில் கழுவேற்றம்

"அவர்எண் ணாயிரம் பேர்களும் கழுவால்
ஆவி விட்டன ராம் அதை விரித்து
விவர மாச்சொல்வார் சிலர், அது வீணே
வென்றி தோய் தமிழ் விரகனார் தமது
பவள வாய்கொடன் னவர்முன் நீர் எம்மைப்
பழித்தி டாதுநும் பதத்தில்வாழ் மின்எனா.
உவகை யோடுரைத் தமையும்அன் னவர்தாம்
ஒப்பி டாமையும் உலகம்ஓ திடுமே".

என்கிற செய்யுளில், எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப் பட்டதை சிலர் விரித்து விவரமாகச் சொல்வர் (Dandapani Swamigal, 1994). இது வீணானது. ஞானசம்பந்தர் தன்னிடம் தோல்வியுற்ற சமணர்களிடம், "நீங்கள் எங்களைப் (சைவர்) பழிக்காமல் உங்களது நெறியில் வாழ்வீராக" என்று கூறினார் என்பதும், ஆனால் சமணர்கள் தான் அதை ஏற்காமல் கழுவேறி உயிர்விட்டனர் என்பதும் உலகமே கூறிடும் என்று திருஞானசம்பந்தரை உயிர் இரக்கம் உடையவராகப் படைத்துப், பழியற்றவராகச் சித்திரிக்க முயன்றுள்ளார். அவ்வாறு முயன்றாலும், அவர் உள்ளத்தில் ஒரு பெருங்குறை இருந்தது. அதனால் அவர் சில கருத்துக்களை முன்வைத்து அதன் அடிப்படையில் ஒரு தீர்வை எட்டுகிறார். அவர் தன் சமகாலத்தில் கழுவேற்ற நிகழ்வினைப் பற்றி எழுந்த இருவேறு கருத்துக்களை முறையாகக் கூறுகிறார். பிறகு அதுபற்றிய தனது கருத்தினையும் கூறி ஒரு முடிவினை எட்ட முயற்சித்துள்ளார்

"மடத்தில் தீயிடல் கழுமரச் சபதம்

வலிது தாம்வகுத்திடல் எனும்இரண்டும்

திடத்த சாரணர்க் காவதன் றதனால்

தீங்க வாறடைந் தார் என்பார் சிலர்; முன்

நடத்தின் சீரத்ததாள் கருதிஓர் பதிகம்

நன்கு காழியூர் நாதன்ஓ துவனேல்

வடத்தில் அன்றுயும் நால்வர்போன் றவரும்

வாழ்வர்; என்னும்வல் வழக்கரும் உளரே"

இச்செய்யுளில் அவர் காலத்தில் நிலவிய இரண்டு வகையான வாதங்களை எடுத்துரைக்கிறார் தண்டபாணி சுவாமிகள் (Dandapani Swamigal, 1994). சம்பந்தர் தங்கயிருந்த மடத்தில் சமணர்கள் தீவைத்ததும், வாதத்தில் தோற்றால் கழுவேறுவதாக அவர்கள் செய்த சபதமும் சமணர் செய்த தவறுகள். அதனால் அவர்கள் அத் தண்டனையைப் பெற்றனர் என்பது ஒருசாரார் வாதம். சிவனை நினைத்து ஒரு பதிகத்தை ஞானசம்பந்தர் பாடியிருந்தால் அச்சமணர்கள் மனம் திருந்தியோ அல்லது உயிர் பெற்றோ வாழ்ந்திருப்பர் என்பது மற்றொரு சாராரின் வாதம். இவ்வாறு இரண்டு தரப்பினை எடுத்துக்கூறும் தண்டபாணி சுவாமிகள், தான் இரண்டாவதாகக் கூறிய கருத்தினைச் சார்ந்தவன் என்பதை உணர்த்தும் வகையில் அடுத்த பாடலைப் பாடியுள்ளார்.

"ஒறுத்த லாற்சிறி தின்பமே எய்தும்

ஊறு செய்தார் உளம்மிக நாணப்

பொறுத்த லேபெரும் புகழ் எனல் உணர்ந்தும்

புகலி யூர்வரு புண்ணியன் றன்னை

வெறுத்த சாரணர் உயும்படி பாடல்

விளம்பச் செய்திலன் வெளுத்தபாற் கடலின்

கறுத்த நஞ்சம்உண் டுலகெலாம் உய்யக்

காத்து ளான்செயல் காணரி தம்மா"

என்கிற செய்யுளில், தண்டிப்பதால் சிறிது இன்பம் தான் கிடைக்கும் (Dandapani Swamigal, 1994). தீங்கு செய்தவரின் உள்ளம் நாணும்படி அவர்களைப் பொறுத்து விடுவதே பெரிய புகழினைத் தரும் என்பதை உணர்ந்திருந்தும் சம்பந்தர் தன்னை வெறுத்த சமணர்கள் உய்யும்படிப் பாடல் பாடவில்லை. பாற்கடலின் நஞ்சினை உண்டு, உலகைக் காத்த சிவனின் செயலைக் காண்பதெல்லாம் அரிதானது என்று புராணப் புனைவை எடுத்துக்காட்டி சம்பந்தர் அத்தகைய பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்று தன் உள்ளத்துள்ள குறையினை வெளிப்படுத்தியுள்ளார் தண்டபாணி சுவாமிகள்.

மேலும் இவ்வாறு கூறுவதால் இளம் சைவர்கள் தன்னை ஞானசம்பந்தரிடம் உள்ளார்ந்த பற்றில்லாதவர் என்று கூறுவர் என்பதை,

"இந்த ஞாயங்கள் சிலசொலு மாற்றால்

என்னை ஞானசம் பந்தமூர்த் தியின்பால்

அந்த ரங்கநண் பில்லவன் என்றே

அறைகு வார்இளம் சைவர்கள்..."

என்ற இப்பாடலடிகளில் வெளிப்படுத்தியுள்ளார் (Dandapani Swamigal, 1994).

## தருக்க அடிப்படை

தண்டபாணி சுவாமிகளின் இக்கருத்து சில தருக்க அடிப்படையிலான கேள்விகளை எழுப்பி உண்மை வரலாற்றை உணர்ந்திட வழிவகை செய்கிறது. ஏனெனில் ஞானசம்பந்தர் தன் ஆற்றலால் பதிகம் பாடி பூம்பாவை என்கிற இறந்த பெண்ணின் எலும்பை மீண்டும் பெண்ணாக உயிர்பெற்று வரவைத்தார், வைகையில் விட்ட தனது ஏடுகளை நீரேட்டத்திற்கு எதிர்த்திசையில் நீந்திக் கரையேறச் செய்தார் என்றெல்லாம் பல அதிசயங்கள் நிகழ்த்தினார் எனக் கூறப்பட்டுள்ளது. உண்மையில், அத்தகைய ஆற்றல் உடையவரெனில், ஒரு பதிகம் பாடிச் சமணரை மனம்திருந்தச் செய்திருக்க முடியும் அல்லது உயிர்மீட்டிருக்க முடியும். தண்டபாணி சுவாமிகளின் இத் தருக்க அடிப்படையிலான வாதம், ஞானசம்பந்தர் செய்ததாகக் கூறப்படும் அதிசயங்கள் அனைத்தும் புனைவுகள்தான் என்ற நிலைபாட்டை பத்தர்களிடமே ஏற்படுத்தும்படி அமைகிறது. இதனால், ஞானசம்பந்தர்க்கு, சமணர்களை அழிக்கும் நோக்கம் இருந்தது என்பதை வைதிக நம்பிக்கை கொண்ட தண்டபாணி சுவாமிகளே ஏற்கும்படி அமைகிறது. இதனை திருஞானசம்பந்தர் வாய்மொழியாலும் அறியமுடிகிறது.

"வேதவேள்வியே நிந்தனை செய்துழல்

ஆதம் இல்லி அமணொடு தேரரை

வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே..."

என்ற பாடலில் வேதத்தையும் வேள்வியையும் இகழும் சமணர் பௌத்தர் ஆகியோரை வாதத்தில் வென்று அழிக்க உம்மை வேண்டுகிறேன் என்று தெளிவாகக் கூறியுள்ளார் ஞானசம்பந்தர் (Natarajan, 2017). இப்பதிகத்தினால், அவர் சமண பௌத்தரை வெல்வதோடல்லாமல், அழிக்கவும் நினைத்துள்ளது தெளிவாகிறது. தமிழகத்தில் அறிவுக்கொவ்வாத வேள்விச் சடங்குகளைச் சமணரும் பௌத்தரும் ஏற்காமல் இகழ்ந்ததும், அதனால் வேள்வி செய்து வாழும் பார்ப்பனராகப் பிறந்த திருஞானசம்பந்தர் பல்லாயிரம் தொண்டர்களோடு மதுரை சென்று அவர்களை அழித்தார் என்பதும் தெரியவருகிறது.

"அந்த மன்னவன் உயும்படி, பதினா

றாயி ரம்தவத் தாரொடு மதுரை

வந்த காழிமன் செயத்தினாற் சமண

வாதை முற்றிலும் மாய்ந்த..."

எனப் புலவர் புராணத்தில் வரும் இவ்வடிகளும், பாண்டியனைத் திருத்தும்படி, ஞானசம்பந்தர் பதினாறாயிரம் தவத் தொண்டர்களுடன் மதுரைக்கு வந்து சமணர்களை அழித்ததாகச் சான்று பகர்கின்றன (Dandapani Swamigal, 1994). பாண்டிய மன்னன் கூறும் முன்பே ஞானசம்பந்தரின் தொண்டர்கள், தோல்வியுற்ற சமணர்களை வலுக்கட்டாயமாகக் கழுவிலேற்றிக் கொன்றனர் என்பதை

கையர் தங்களைக் களையுமின் களையுமி னெனவே

துய்ய மன்னவன் சொல்லுமுன் கறுவிய தொண்டர்

பொய்செய் பாதகக் குழுவெலாந் தொலைத்திமைப் பொழுதில்

வெய்ய நீள்கழு வேற்றினர் மெலிந்துயிர் பதைப்ப.

என்ற திருவிளையாடற்புராணப் பாடல்வழி அறியமுடிகிறது (Perumpatrapuliyur Nambi, 1906). சமணர்கள் கழுவேற்றப்பட்ட பிறகு, மதுரையிலும் மதுரைக்கு வெளியே இருப்போரும் அமணர்கள் வாழும் பாழிகளையும், அருகர் வாழும் பள்ளிகளையும் தாக்கி அழித்தனர் என்பதைப் பின்வரும்,

பூழியன் மதுரை யுள்ளார் புறத்துளா ரமணர் சேரும்

பாழியு மருகர் மேவும் பள்ளியு மான வெல்லாங்

கீழுறப் பறித்துப் போக்கிக், கிளரொளித் தூய்மை செய்தே

வாழியப் பதிக ளெல்லா மங்கலம் பொலியச் செய்தார்.

என்ற பெரியபுராணப் பாடல் பகர்கின்றது (Gnaanasampandhan, 2020). ஞானசம்பந்தர் வருகையினால் பாண்டிய நாட்டில் வன்முறையும் மதக்கலவரமும் நிகழ்ந்துள்ளன என்பதை இவை உணர்த்துகின்றன. அவர் மதுரை வந்தபோது நிகழ்ந்தவற்றை பௌத்தத் துறவியும் சீனப் பயணியுமான யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் வழி அறியமுடிகிறது. "தெற்கு நோக்கிய யுவான் சுவாங்கின் பயணத்தைத் தடுக்கும் வகையில் அவர்கள் (சிங்கள பௌத்தர்கள்) ஒரு செய்தியைக் கூறினர். "அந்நாட்டு அரசன் அண்மையில்தான் காலமானான். அதனால் அந்த நாட்டில் அரசியல் குழப்பங்களும், கலவரங்களும் நடந்தபடி உள்ளன. எனவே அங்கு போகவேண்டாம் என்பதே அந்தச் செய்தி" (Nedunjezhiyan, 2017). "யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பை உறுதி செய்யும் வகையில் சம்பந்தரின் ஆலவாய்ப் பதிகமும் அமைந்துள்ளது. அமணர்களைக் கழுவேற்றி அமண் இருளை அகற்றி மன்னனை மனந்திருத்திச் சைவனாக மாற்றினார் ஞானசம்பந்தர் எனச் சேக்கிழார் விரிவாகப் பாடினாலும், உண்மை அதற்கு மாறாகவே இருந்துள்ளது. எல்லாவற்றையும் முடித்துவிட்ட நிலையில் மதுரையிலிருந்து புறப்படும் வேளையில் ஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று மிகப்பெரிய புதிருக்கான விடையாக உள்ளது. பத்துப் பாடல்கள் கொண்ட அப்பதிகத்தின் ஒற்றைப்படை எண்ணுள்ள பாடல்கள் அனைத்தும் பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியையும், இரட்டைப்படைப் பாடல்கள் அனைத்தும் அமைச்சர் குலச்சிறையையும் மட்டுமே குறித்துள்ளன" (Nedunjezhiyan, 2017). எனவே சமணத்தை ஆதரித்த பாண்டிய மன்னன் மறைந்ததால் சைவப்பற்றுள்ள அரசியான மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறை ஆகியோரின் ஆதரவால் ஞானசம்பந்தர் தன் தொண்டர்கள் உதவியோடு சமணர்களை அழித்துள்ளார் என்று எண்ணற்பாலது.

"1. பாண்டிய வேந்தன் மதம் மாற்றப்பட்டது உண்மை எனில் அவனைப் பற்றிய குறிப்பு ஏன் பதிகத்தில் இடம்பெறவில்லை?

2. அல்லது மன்னன் உயிரோடு இருந்திருந்தாலும் அவனைப் பற்றிப் பாடி இருக்க வேண்டுமே! ஏன் பாடவில்லை?"

என்கிற பேராசிரியர் க.நெடுஞ்செழியனின் தருக்க முறையிலான வினாக்கள் உண்மை வரலாற்றினை அறிய உதவுகின்றன (Nedunjezhiyan, 2017).

இந்நிகழ்வினை ஒத்த மற்றொரு நிகழ்வு ஐரோப்பிய கண்டத்தில் நிகழ்ந்துள்ளதை அறியமுடிகிறது. கிறித்துவ மதத்ததில் இருந்து மாறுபட்ட கொள்கைகளை உடைய மக்கள் அல்பி என்ற பகுதியில் வாழ்ந்தனர். அவர்கள் அல்பிஜென்சியன் என்று அழைக்கப்பட்டனர். பல லட்சம் அல்பிஜென்சியன் மக்களை கிறித்துவத்தின் தலைமைப் பதிவியில் இருந்த போப் இன்னொசண்ட் என்பவர் படைகளை அனுப்பிக் கொன்றொழித்தார். இதுவே குரிசில் போர் என்றும் சிலுவைப்போர் என்றும் வரலாற்றில் குறிக்கப்படுகிறது. "இப்படி லட்சோப லட்சம் மக்களைப் படுகொலை செய்ததற்கு போப்பும் போப்பின் ஒலிக்குழாய்களாக இருந்த வரலாற்றாசிரியர்களும் என்ன விளக்கம் கூறினார்கள் தெரியுமா? அல்பிஜென்சியன் தத்துவங்கள் தடுக்கப்படாமல் விட்டால், அதன் விளைவாக உலக நாகரிகமே அழிந்துபோகும். எனவே உலக நாகரிகத்தைக் காப்பாற்ற வேண்டியே அல்பிஜென்சியன்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது இவர்களது விளக்கம்" (Veeramani, 2013). இதைப்போலே, சைவ

சமய நூலாசிரியர்களான நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், பெரும்பற்றப்புலியூர் நம்பி, பரஞ்சோதி முனிவர் என்று அனைவரும் சமணர் அழிக்கப்பட்டது நியாயமானதுதான் என்று பலவாறாக் புனைக்கதைகளை உரைத்துள்ளனர் என்று அறியமுடிகிறது. உலக நாகரிகம் அழிந்துவிடும் என்பதால் அல்பிஜென்சியன்கள் கொல்லப்பட்டனர் என்ற படுகொலையை நியாயப்படுத்தும் வாதத்தைப்போலவே, திருவிளையாடற் புராணத்தில் பெரும்பற்றப்புலியூர் நம்பியும், வைதிக வேள்விகள் அழிந்தால் உலகமே கெட்டுவிடும் என்பதால் சமணர்கள் கொல்லப்பட்டனர் என்று கழுவேற்றத்தை நியாயப்படுத்துகிறார். இவ்வாறு உலக வரலாற்றில் சமய மோதல்களும் கலவரங்களும் வரலாற்றாசிரியர்களாலும், சமய நூலாசிரியர்களாலும் புனிதப்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## தண்டபாணி சுவாமிகள் முன்வைக்கும் தீர்வு

சம்பந்தர் தன்னிடம் தோல்வியுற்ற சமணர்களிடம், "எங்களைப் பழிக்காமல், நீங்கள் உங்கள் நெறியில் வாழுங்கள்" என்று இரக்கத்தோடு கூறினார் என்றும், அதனைச் சமணர் தாம் ஏற்காமல் உயிர்விட்டனர் என்றும் கூறி ஞானசம்பந்தரை உயர்ந்தவராகச் சித்தரித்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தன் கனவில் கண்டதாகப் பின்வரும் ஒரு புனைவினைக் கூறுகிறார் (Dandapani Swamigal, 1994).

"பறிதலைச் சமணர்க் கோறல் பாவம் என் றிரங்கி னானால்."

"பாரும்விண் ணுலகும் போற்றப் பருஞ்சிவ லிங்கம் தாபித்து,

ஆரும்நல் இதழி வில்வம் ஆதியும் அருச்சித் தானே"

அதாவது, ஞானசம்பந்தர் சமணர்களை அழித்தது பாவம் என்று வருந்தினாரால், அப்பாவம் தீர சிவலிங்கம் நிறுவிப் பூசை செய்தார் என்றும், அப் பூசையால் மகிழ்ந்த சிவன்,

"...நின் வினைஎல் லாமும்

எண்டரும் எனதென்றான்..."

அதாவது, நீ செய்த வினையெல்லாம் என்னையே சாரும் என்று சிவன், சம்பந்தரிடம் கூறினார் என்று பாடுகிறார். அத் தலமே, நெல்லையில் ஞானசம்பந்தர் நிறுவியதாகக் கூறப்படும் தொண்டர்கள் நயினார் கோவில் என்கிறார் தண்டபாணி சுவாமிகள். சமணரை வாழவைக்காமல் அழித்தவர் என்ற இகழ்ச்சியினின்றும் சம்பந்தரை விலக்குவதற்கு இப் புனைவினை நுட்பமாகப் படைத்துள்ளார் தண்டபாணி சுவாமிகள் (Dandapani Swamigal, 1994). இதனை,

"அன்னவர் கொன்ற பாவ மதைஎடுத் தறைவார் தம்முன்

இன்னவர்க் கதியிற் சேர்த்த இசைஎடுத் திசைப்பார் சில்லோர்

சொன்னஅவ் விரண்டும் நெல்லைத் தொண்டர்கள் நயினார் சொல்லால்

பன்னரும் புகழ்ச்சீ காழிப் பனவனார் மதலைக் கின்றே"

என்ற பாடலில் சம்பந்தர் சமணரைக் கொன்ற பாவத்தை சிலர் கூறுவர். சம்பந்தர் தன் சுற்றத்தாரை முத்தி பெறச் செய்த புகழினை சிலர் கூறுவர். ஆனால் இவ்விரண்டும் சிவனது வாக்கின்படிப் பார்த்தால், சம்பந்தரைச் சாராது. சிவன் செயலாகவே கருதப்படும் என்று தன் தீர்வைக் கூறுகிறார். முறையான கேள்விகளையும் தருக்கக் கருத்துக்களையும் முன்வைத்து ஞானசம்பந்தரின் செயல்களை மதிப்பிட்ட வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இறுதியாக எல்லாம் சிவன் செயல் என்று முடிவுகூறுகிறார். இது ஞானசம்பந்தர் மீதான விமர்சனப் பார்வையைத் தவிர்ப்பதற்கான உத்தியாக அமைகிறது. இத்தகையக் கருத்துக்களைச் சொல்வதற்கே அவர் காலத்தில் சமயநிறுவனங்களின் எதிர்ப்பு இருந்துள்ளது என்பதை

"சிந்தை யின்கன வூடுகண் டுள்ளேன்

அவிவு றாதருட் பேறுறில் நன்றாம்

ஆகம் வீழ்தரின் அகிலமீ தெவர்யாண்

டெவிதம் சொல்லினும் நிமித்தமின் றினிஆங்

கியன்ற காதைகள் இயம்புவன் தொகுத்தே"

என்ற பாடலடிகளால் விளங்குகிறார் தண்டபாணி சுவாமிகள் (Dandapani Swamigal, 1994).

## வேள்வி எதிர்ப்பு

திருஞானசம்பந்தர் சமணர்களை அழித்தற்கான முதன்மைக் காரணம், அவர்கள் வேத வேள்விகளை மதிக்கவில்லை என்பதாக முன்னர்க் கூறினம். அவ்வாறு, திருஞானசம்பந்தர் தன் தலைமேற்கொண்டு காப்பாற்றிய வேள்விமுறையினை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இகழ்கிறார் (Dandapani Swamigal, 1994). இதனை,

"மன்றுள் ஆடியபொற் றாள்வாழ் மனத்தனாம் தாதை வேள்விக்

கென்றுகேட் டதற்குச் செம்பொன் ஈசனாற் பெற்றிட் டீந்தான்"

என்ற செய்யுளில் தந்தை சிவபாத இருதயர் வேள்வி செய்யப் பொருள் கேட்டதற்கு, திருஞானசம்பந்தர் சிவன் அருளால் பொன் பெற்றுக் கொடுத்தான் என்று கூறும் தண்டபாணி சுவாமிகள், அடுத்த செய்யுளில்,

"எவ்வகைப் பயனும் நல்கும் இயற்சிசு எய்தி னாற்கும்

அவ்வச டாயகன்மத் தாசைவந் துதித்த தானால்

பௌவநீர் அனைய முன்னைப் பழவினை யுடைய பார்ப்பார்,

வெவ்வழற் சுடும்ஊன் தின்கை வியப்பென விளம்பொண் ணாதே"

என வேள்வி வேட்பதை "அசடாய கன்மம்" அதாவது மூடப் பழக்கம் என்று இகழ்கிறார் (Dandapani Swamigal, 1994). முற்பிறவியில் செய்த வினைகளை உடைய பார்ப்பனர், வேள்வி நெருப்பில் சுட்ட புலாலினைத் தின்பதில் வியப்பேதும் இல்லை என்ற பொருளில் வேள்வியை வெறுத்துக் கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள். சமணர்கள் வேள்வியை எதிர்த்தனர். ஞானசம்பந்தர் வேள்வித் தொழிலைக் காப்பதற்காகத்தான் அதனை ஏற்காத சமணரை அழித்தார். இச்சூழலில் தண்டபாணி சுவாமிகள் வேள்வியை எதிர்த்த சமணர்க்குச் சார்பாகத்தான் காப்பியம் புனைந்திருக்க வேண்டும். ஆனால் தண்டபாணி சுவாமிகள் அவ்வாறு செய்யாமல் சமணரோடு முரண்படுகிறார். மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்ற நம்பிக்கையையும், ஓருயிர்க்கும் துன்பம் செய்தலாகாது என்ற கொள்கையையும் ஏற்கும் மதங்கள் அனைத்தும் நல்ல மதங்கள் தான் என்று கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள். இதில் சமணர்களும், பௌத்தர்களும் ஓருயிர்க்கும் தீங்கு செய்யாத கொல்லாமை நெறியினர், ஆனால் அவர்கள் மெய்ப்பொருள் என்ற கடவுட் கருத்தினை ஏற்காதவர்கள். எனவே கடவுள் எனும் கருத்தை ஏற்காததால் சமண பௌத்த மதங்களை தண்டபாணி சுவாமிகள் ஏற்கவில்லை என்று உணரற்பாற்று.

## முடிவுரை

பெரிய புராணத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் சமணர்களைச் சில காரணத்தால் தண்டிக்க ஒப்புக்கொண்டதாகக் கூறப்பட்ட திருஞானசம்பந்தர், சமணரைப் பார்த்து, சைவர்களாகிய எங்களைப் பழிக்காமல் உங்கள் வழியில் வாழுங்கள் என்று பெருந்தன்மையோடு கூறியதாகப் புலவர் புராணத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார். இலக்கியம் என்பது படைக்கும் மனிதரின் கொள்கைக்கேற்ப மாறுபடுகிறது என்பதை இம் மறுகட்டமைப்பு நன்கு உணர்த்துகிறது. திருஞானசம்பந்தர்

வாய்மொழியிலேயே அவர் சமணரை அழிக்கும் நோக்கம் உடையவர் என்பது தெளிவாகத் தெரிந்தாலும், பிந்தைய நூல்கள் அவர் அறத்தின்படியே நடந்துகொண்டார், அவர்க்குச் சமயவெறுப்பு இல்லை என்று படைத்துள்ளதை அறியும்போது, சமயத்தின் பெருமையும் சமயக்குரவர்களின் புனிதத்தன்மையும் மக்களிடையே செல்வாக்குடன் இருப்பதற்காக, வரலாற்றில் இத்தகைய புனைவுகளும் கற்பனைகளும் கலந்து படைக்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகிறது. இதற்கு ஒரு சிறந்த சான்று "ஞானசம்பந்தரின் வினை எல்லாம் சிவனது வினையே" என்று தண்டபாணி சுவாமிகள் தம் புலவர் புராணத்தில் கூறியுள்ள முடிவாகும். சில வாய்மொழிக் கதைகள், சீவகாருண்ய நெறி, வேள்வி எதிர்ப்பு என்று மாறுபட்ட கருத்துக்களுடன் திருஞானசம்பந்தர் வரலாற்றை அவர் கூறினாலும், இறுதியில் சமயப்பற்று என்ற நிலையில், அவரே, திருஞானசம்பந்தரைக் குற்றமற்றத் தூயவராகச் சித்தரிக்கும் வகையில் அத்தகைய முடிவினைக் கூறியுள்ளார் என்று உணரற்பாற்று. சமயச்சார்பும் இறைநம்பிக்கையும், சுதந்திரச் சிந்தனையை நீர்த்துப்போகச் செய்துள்ளதை உணரமுடிகிறது.

## References


Dandapani Swamigal, (1994) Pulavar Puranam, Ramananda Adigalar Foundation, Kumaraguru College of Engineering, Coimbatore, India.

Gnaanasampandhan, A.S., (2020) Periyapuranam Oor Aaivu, Vanathi Pathippagam, Chennai, India

Jagannathan, Ki.Va., (1962), Nayanmar Kathai, 1st edition, Amuda Nilayam, Chennai, India

Kalaivani, S., (2020) Dhandapani Swami's Aruvagai Ilakkanam – Edition History, International Research Journal of Tamil, 2(3), 52-59. https://doi.org/10.34256/irjt2035

Natarajan, P.R., (2017) Thirugyanasampandar Devaram, Uma Pathippagam, Chennai, India

Nedunjezhiyan, Ka, (2017), Bakthi Iyakkangalum Vaidhiga Ethirpum, Karikalan Pathippagam, Mathur, India

Perumpatrapuliyur Nambi, (1906), Thiruvalavayudaiyar Thiruvilaiyadarpuranam, Chennai-Presidency Press, India

Vasantha Kumar, (2017) Padhinooraam Thirumurai, Panniru Thirumurai Ayivu Maiam, Karpagam University, Coimbatore, India

Veeramani. Ki, (2013), Ulaga Varalatril Pagutharivu Suvadugal, 1st edition, Dravidar Kazhagam Publications, Chennai.

Venkataraman Su,, (2007), Thirugnanasambandar, 1st edition, Sahitya akademi, New Delhi, India.

Venkataraman, Su, (2004), Ariyapadaadha Tamil Ilakkiya Varalaru, 1st Edition, Meenakshi Bookstore, Madurai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License